வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 3557/ஆ4/2024 நாள்: 24.12.2024

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மார்ச்/ ஏப்ரல் – 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு– தேர்வெண்ணுடன் கூடிய பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவிறக்கம் (Download) செய்தல் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு –தெரிவித்தல் –சார்பு

பார்வை :
1. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.015885/ பி1/2024 நாள் 11.11.2024
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 12.11.2024
3. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.015885/ பி1/2024 நாள் 23.12.2024

===============

பார்வை–2 ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டத்தில் , 2024–2025–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் GR எண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியல் 13.11.2024 பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்யுமாறும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அத்திருத்தங்களை 15.11.2024 முதல் 22.11.2024 வரையிலான நாட்களில் பதிவேற்றம் செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பார்வை –3ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி மேற்கண்ட நாட்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு, மார்ச்/ஏப்ரல்– 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியல் 24.12.2024 பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு அனைத்து வகை மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக்கல்விஅலுவலர்
வேலூர்.

பெறுநர்,

அனைத்து வகை உயர் /மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) வேலூர், அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.